# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## அரசாங்க நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், மாகாண சபைகளின் தலைவர்களுக்கான அறிவித்தல்

### உழைக்கும் பொழுது செலுத்தும் வரித் திட்டத்தின் கீழ் வரிக் கழிப்பனவு

2011 வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு (2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு உரிய திருத்தங்கள் செய்யப்படும் என்ற வகையில்) ஊழிய வருமானம் (மிகைக் கொடுப்பனவுகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், விருதுகள், தண்டப் பங்குகள் அல்லது அதனையொத்த பிற கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக) பின்வருபவர்களின் வருமானம் 2010 ஏப்ரல் 01 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக (வரி வரவு நீங்கலாக) ரூபா 600,000/- இனை விஞ்சும் போது வரிப்பொறுப்புக்கு உட்படுவதுடன் உ.பொ.செ திட்டத்தின் கீழ் கழிப்பனவு செய்யப்படும்.

1. குடியரசின் கீழ் ஏதேனும் வேதனத்துடனான பதவியை வகிக்கின்ற எவரேனும் தனியாளுக்குத் திரட்டு நிதியத்திலிருந்து;
2. ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குத் திரட்டு நிதியத்திலிருந்து பாராளுமன்றத்தினால் ஆண்டுதோறும் வாக்களிக்கப்படும் பணத் தொகையி லிருந்தான முழுமையான அல்லது பகுதியளவிலான வேதனாதிகளிலிருந்து, அத்தகைய வேதனாதிகளை அல்லது அத்தகைய ஓய்வூதியத்தை அல்லது அத்தகைய இலாபங்களைச் செலுத்துகின்ற ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனமாகவுள்ள அத்தகைய கூட்டுத்தாபனத்தின் எவரேனும் ஊழியருக்கு;
3. அரசியலமைப்பின் 154ஆ என்னும் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட ஏதேனும் மாகாணத்தின் ஆளுநருக்கு;
4. ஏதேனும் மாகாணசபையின் எவரேனும் உறுப்பினருக்கு;
5. ஏதேனும் மாகாணசபையின் எவரேனும் ஊழியருக்கு அல்லது ஏதேனும் மாகாணப் பகிரங்க சேவையின் எவரேனும் அலுவலருக்கு;
6. ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக்கு;
7. ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எவரேனும் ஊழியருக்கு;
8. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் பல்கலைக்கழகத்தின் எவரேனும் ஊழியருக்கு;
9. 1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கைக் கொள்கைகள் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கொள்கைகள் கற்கைகள் நிறுவகத்தின் எவரேனும் ஊழியருக்கு;
10. ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் சபையாக அல்லது விசாரணை ஆணைக்குழுவாகவிருப்பதுடன், அதன் உறுப்பினர்கள் எல்லோரும் சனாதிபதியால் அல்லது அமைச்சரொருவரினால் நியமிக்கப்படுவோராக உள்ள சபையின் அல்லது ஆணைக்குழுவின் உறுப்பினரொருவருக்கு அல்லது ஊழியரொருவருக்கு;

இதற்கமைவாக, ரூபா 600,000/- இனை விஞ்சிய வருமானத்தினை ஊழியத்தியத்திலிருந்து பெறும் ஊழியர்களை கொண்டுள்ள தொழில்தருநர்களான அரசாங்க நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், மாகாண சபைகள் என்பவற்றின் தலைவர்கள் ஊழியர்களது உ.பொ.செ. வரியினை அறவிடுவதற்கு பதிவு செய்யுமாறு வேண்டப்படுவதுடன் உ.பொ.செ வரியினை கழிப்பனவு செய்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கும் வகையில் கொழும்பு – 02, யூனியன் பிளேஸ், இல.278, எக்சஸ் ரவர் 4 ஆம் மாடியில் அமைந்துள்ள உ.பொ.செ வரிக் கிளையின் பிரதி ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் தொலைபேசி இலக்கங்களின் மூலம் தொடர்பு கொள்ளவும்.**

| | | | |
|---|---|---|---|
| உ.செ.பொ வரிப் பிரிவு | - | தொலைபேசி - | 011-2302249, 011-3009429 |
| வரி செலுத்துநர் சேவைப்பிரிவு | - | தொலைபேசி - | 011-2328702, 011-3009093, 011-3009257 |
| செயலகக் கிளை | - | தொலைபேசி - | 011-2338635, 011-2338570 |

உள்நாட்டு இறைவரி இணையத்தளம் : www.inlandrevenue.gov.lk

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

| | |
|---|---|
| INLAND REVENUE SRI LANKA | வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக |